# அட்டை மீதி மாற்றத் திட்டம்

## விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. அட்டை மீதி மாற்றத் திட்டம் ("CBC") என்பது ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டினால் (''வங்கி'' அல்லது "HSBC") அதன் நிறுவனக் கடன் அட்டை வைத்திருப்பவா்கள் தவிர்ந்த கடன் அட்டை வைப்பாளர்களுக்கு (''அட்டை வைத்திருப்பவர்கள்'') வழங்கும் ஒரு வசதியாகும். வங்கியானது அதன் தனித் தற்றுணிபிற்கேற்ப இத் திட்டத்தை எந்த நேரத்திலும் மீளப்பெற அல்லது திருத்த முடியும்.

2. இத் திட்டத்திற்கான தகுதியைப் பெற, குறைந்தபட்ச கொடுக்கல் வாங்கல் பெறுமதி இ.ரூ.25,000/- ஆகவும் அதிகபட்ச கொடுக்கல் வாங்கல் பெறுமதி இ.ரூ.400,000/- ஆகவும் இருக்கும். (இது இனிமேல் ''தகுதியுள்ள கொடுக்கல் வாங்கல்'' எனப்படும்)

3. விசேட ஊக்குவிப்புத் திட்டங்களுக்கெனக் குறித்துரைக்கப்படாவிட்டால், ஒரு தகுதியுள்ள கொடுக்கல் வாங்கலை அக் கொடுக்கல் வாங்கல் கொள்வனவு இடம்பெற்ற திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள் மட்டுமே CBC ஆக மாற்ற முடியும்.

4. தகுதியுள்ள ஒரு கொடுக்கல் வாங்கலை, வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு கையாளுகைக் கட்டணத்துடன் சேர்த்து 3, 6, 12 அல்லது 24 மாதத் தவணை திட்டமாக மாற்றிக்கொள்ள முடியும்.

5. கடன் அட்டைக் கணக்கின் மீதான கடன் உச்சவரம்பானது CBCயின் பிரதான தொகை, கையாளுகைக் கட்டணம் ஆகியவற்றின் அளவினால் குறைக்கப்படும். அடுத்தடுத்த மாதங்களில் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் பட்டியலிடப்பட்டுச் செலுத்தப்படும்போது அத் தொகை விடுவிக்கப்படும்.

   கடன் அட்டையின் பேரில் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவானது மாதாந்தக் கடன் தவணைத் தொகை, கடன் அட்டையின் பேரில் செலுத்தப்பட வேண்டிய நிலுவை மீதியின் 4% என்பவற்றின் கூட்டுத் தொகையாக இருக்கும். அட்டை வைத்திருப்பவா் தனது கடன் அட்டைக் கணக்கிற்குச் செலுத்தும் கொடுப்பனவுகள், கடன் அட்டை விதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுப்

படிமுறைக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படும் என்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார். (அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தம்) (http://www.hsbc.lk/1/2/personal/credit- card/quick-consumer-guide ஊடாகப் பார்க்கலாம்)

CBC தவணைகள் பட்டியலிடப்படும் முறைக்கான ஓர் உதாரணம் கீழே காட்டப்பட்டுள்ளது.

CBC பிரதான கொடுக்கல் வாங்கல் தொகை இ.ரூ.100,000/-

கையாளுகைக் கட்டணம் இ.ரூ.9,900/-

காலப்பகுதி 12 மாதங்கள்

| மாதம் | மாதாந்தத் தவணை | மாதாந்தக் கையாளுகைக் கட்டணம் | மாதாந்தப் பிரதான தொகை | நிலுவையாகவுள்ள பிரதான தொகை மீதி |
|---|---|---|---|---|
| 1 | 9158.33 | 1,475.10 | 7,683.23 | 92,316.77 |
| 2 | 9158.33 | 1,376.10 | 7,782.23 | 84,534.54 |
| 3 | 9158.33 | 1,253.95 | 7,904.38 | 76,630.16 |
| 4 | 9158.33 | 1,136.58 | 8,021.75 | 68,608.41 |
| 5 | 9158.33 | 1,017.50 | 8,140.83 | 60,467.58 |
| 6 | 9158.33 | 896.68 | 8,261.65 | 52,205.92 |
| 7 | 9158.33 | 774.08 | 8,384.25 | 43,821.67 |
| 8 | 9158.33 | 649.70 | 8,508.63 | 35,313.05 |
| 9 | 9158.33 | 523.50 | 8,634.83 | 26,678.22 |
| 10 | 9158.33 | 395.46 | 8,762.87 | 17,915.35 |
| 11 | 9158.33 | 265.55 | 8,892.78 | 9,024.60 |
| 12 | 9158.33 | 133.73 | 9,024.60 | (0.00) |

6. CBC மாதாந்தத் தவணைப்பணம் உடனடி அடுத்த விபரக்கூற்றுத் திகதியில் அட்டை வைத்திருப்பவருக்குப் பட்டியலிடப்படும்.

7. அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் தவணைக் கொடுப்பனவைச் செலுத்தத் தவறினால், CBC நிலுவையை முடிவுறுத்தவும் எஞ்சியுள்ள தொகை முழுவதையும் கணக்கில் பற்று வைக்கவும் HSBC உரிமை கொண்டுள்ளது. .

8. கடன் அட்டை நிலுவைக்கு மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவு, இன்னமும் பட்டியலிடப்படாத தவணைத் தொகைகளுக்கு எதிராக தன்னியல்பாகவே ஈடுசெய்யப்பட மாட்டாது. ஆகவே, அது CBC வசதிக்கான முன்கொடுப்பனவாகக் கருதப்பட மாட்டாது.

9. அட்டை வைத்திருப்பவர் உரிய திகதிக்கு முன்பே அட்டை மீதி மாற்றத் தொகையைச் செலுத்தி முடிக்க விரும்பினால், அட்டை வைத்திருப்பவர் உரிய திகதிக்கு முன்பே அட்டை மீதி மாற்றத் தொகையைச் செலுத்தி முடிக்க விரும்பினால், அட்டைக் கணக்கின் மீதான மீதி மாற்றத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கான தனது நோக்கத்தை எழுத்து மூலம் HSBCக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு முன்கூட்டியே தீர்ப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், மீதி மாற்றத் திட்ட மூலதன நிலுவைத் தொகையில் இருந்து 4% முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணமாக அறவிடப்படும்.

10. அட்டை வைத்திருப்பவர் ஏற்புடைய தவணைத் தொகைகள் அனைத்தையும் கடன் அட்டைக் கணக்கிற்குச் செலுத்துவதற்கு முன்பே தனது கடன் அட்டையை முடிவுறுத்தினால், எஞ்சியுள்ள CBC தொகை ஓர் ஒட்டுமொத்தத் தொகையாக கடன் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

11. CBC வசதியைப் பெற்றுக்கொள்வதால் அட்டை எதிர்நோக்கக்கூடிய அல்லது அவரால் உறப்படும் ஏதேனும் சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள், சேதங்கள், கிரயங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகளுக்கு அட்டை வைத்திருப்பவர் HSBCஐ பொறுப்பாளியாக்க முடியாது.

12. இந்த வழங்கலுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள், அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமானவையே அன்றி அவற்றைத் தரங்குறைப்பவை அல்ல. இந்த வழங்கல் அட்டை வைத்திருப்பவர்களுக்கான ஒரு விசேட வசதியாகும். இதில் அடங்கியுள்ள எதுவும் அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பாரபட்சமாக அல்லது பாதிப்பாக அமையாது.

13. சர்ச்சைகள் உள்ளடங்கலாக, இந்த வழங்கல் தொடர்பான சகல விடயங்களிலும் வங்கியின் தீர்மானமே இறுதியானதாகவும் வழங்கலைப் பயன்படுத்தும் அட்டை வைத்திருப்பவர்களைப் பிணிப்பதாகவும் அமையும்.

14. அட்டை வைத்திருப்பவர் இந்த வழங்கலில் பங்குபற்றுவதன் மூலம் இங்குள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வங்கியின் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றார்.

15. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும். இது தொடர்பான சகல விடயங்களிலும் இலங்கை நீதிமன்றங்கள் பூரண நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும்.